**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 -ம் நாள் திங்கள்கிழமை

**O.S. No.86 /2024**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனபால் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | ராமச்சந்திரன் | கிராமம் | : | ஏரந்தவாடி |
| | | | தொழில் | : | விவசாயி |
| | | | வயது | : | 56 |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பழனி அய்யா தஞ்சராயர் என்பவரிடம் 3ம் பிரதிவாதியின் தகப்பனார் 3ம் பிரதிவாதி மைனராக இருந்த போது தாவா சொத்தை கிரய வாங்கி உள்ளாரா என்றால் வாங்கியுள்ளார். அதன் ஆவண எண்.261/1991 என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு நேரடியாக ஒரு கிரய ஆவணம் எழுதிகொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணத்தின் எண்.679/2021 என்றால் தெரியாது. அந்த ஆவணத்தின்குறிப்பிடப்பட்டுள்ள புல எண்.25/9A ல் மொத்த பரப்பளவான 0.08.00 ஏர்ஸ்ஸில் 0.02.76 ஏர்ஸ்ம் மற்றும் புல எண்.25/9B ல் மொத்த பரப்பளவான 2 1/2 ஏர்ஸ் ஆக மொத்தம் 0.05.00 ஏர்ஸ் 3ம் பிரதிவாதியிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா இடத்தில் முன்பகுதியில் வீரையர் தொண்டமார் கூரை வீடு கட்டி வசித்து வந்தார் என்றால் சரிதான். அதன் அருகில் ஒரு டீக்கடை ஒன்று இருந்தது என்றால் சரிதான். எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ள மாரியாயி யார் என்றால் வீரையன் தொண்டமாரின் உறவினர் ஆவார். வழக்கு சொத்திற்கும் மாரியாயிற்கு என்ன தொடர்பு என்றால் அவருக்கு உரிமை உண்டு ஆனால் எவ்வாறு உரிமையுடையது என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்தின் புல எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மாரியாயிக்கு தாவா சொத்து எவ்வாறு உரிமையுடையது என்று காட்டும் ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மாரியாயிக்கே சொத்து உரிமை இல்லாத பட்சத்தில் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள சம்மத ஆவணமானது நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. 01.01.1950 முதல் 31.12.1974 வரை சார்பதிவு அலுவலகத்தில் தாவா சொத்து குறித்து வில்லங்க சான்று எடுத்ததில்

எனக்கு தாவா சொத்தை பொறுத்து ஆவணம் எழுதிக்கொடுத்ததாக பதிவுகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 01.01.1975 முதல் 07.07.2023 வரை வரை சார்பதிவு அலுவலகத்தில் தாவா சொத்து குறித்து வில்லங்க சான்று எடுத்ததில் எனக்கு தாவா சொத்தை பொறுத்து ஆவணம் எழுதிக்கொடுத்ததாக பதிவுகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 70 ஆண்டுகளாக வில்லங்க சான்றிதழை பரிசீலனை செய்ததில் எந்த ஆவணமும் நான் பதிவு செய்ததாக இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ஆவணத்தில் தாவா சொத்தின் புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பு குறித்து வட்டாட்சியர் மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் வந்து ஆய்வு செய்தார்களா என்றால் ஆய்வு செய்தார்கள். அதன்படி ஆய்வு செய்து 22.07.2022 வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்று ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லி உத்தரவு போடப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்றால் ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை. ஆக்கிரமிப்பை அகற்ற சென்ற அதிகாரிகளிடம் அரசுப்பணி செய்யவிடாமல் தடுத்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் 2 மகன்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் அவர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் வந்தார்கள் என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது)**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.18 11:12:26 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal